



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தண்டலம் ஊராட்சி தி.மு.க சார்பில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ. வந்தேமாதரம் ஏற்பாட்டிலும் ஊராட்சி மன்றத் தலைவர் கே.அரசு தலைமையிலும் நடைபெற்ற திராவிட பொங்கல் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் 2,000 பொதுமக்களுக்கு பொங்கல் பரிசை வழங்கினார்.





தலைமைச் செயலகத்தில், நேற்று (19.01.2026) தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் அவர்களை 2025 ஆம் தொகுதி இந்திய வெளியுறவுப் பணி பயிற்சி அலுவலர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து, தமிழ்நாட்டில் கலாச்சாரம், வர்த்தகம், தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் திறன் மேம்பாடு ஆகிய துறைகளில் உள்ள முன்னெடுப்புகள் குறித்து கலந்துரையாடினர். இந்நிகழ்வில் மனித வள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் சி.சமயமூர்த்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 334 வது நாள்!

## வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை,ஜன.20-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 334 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (19.01.2026), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம்104, தங்கம் காலனி, அண்ணாநகர் மேற்கு, 2) வட்டம் 104அ, டி. வி நகர் திருமங்கலம் ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே. வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீன தயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமா சங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, K.S.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ. துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## 8 லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு மறுக்கப்பட்டு வரும்

# நிதி சார்ந்த நீதியை ஒன்றிய அரசு உடனே வழங்க முன்வர வேண்டும்!

## பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தொழிற்சங்கக் கட்டமைப்பு வலியுறுத்தல்!

திருவாரூர், ஜன.20

எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு கடந்த 18 ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வரும் நிதி சார்ந்த நீதியை தாமதமின்றி வழங்க இந்திய அரசும் வங்கி நிர்வாகங்களும் முன் வரவேண்டும் என்று பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தொழிற்சங்க தலைவர்களின் கட்டமைப்பு வலியுறுத்துகிறது.

கடந்த 2008-ஆம் ஆண்டு வங்கித்துறை ஓய்வூதியர்கள் மத்தியில் சமநீதி வேண்டி உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட எம்.சி.சுக்லா வழக்கில் 18 ஆண்டுளைக் கடந்த பின்னரும் வெளிப்படுத்தப்படும் அதீத காலதாமதம் எட்டு லட்சம் வங்கி ஓய்வுதியர்கள் மத்தியில் கலக்கத்தையும் கவலையையும் உருவாக்கி உள்ளது. வாழ்நாள் முழுமையும் பொதுத்துறை வங்கிகளின் வளர்ச்சிக்காகவும், நாட்டின் நலனுக்காகவும், அர்ப்பணித்துக் கொண்டு உழைத்த வங்கி ஓய்வுதியர்கள் சமூகக் கழிவாக (Social Waste) கருதப்பட்டு விடக்கூடாது.

ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா, நபார்டு மற்றும் மத்திய மாநில அரசின் ஓய்வூதியர்களுக்கு ஒவ்வொரு ஊதிய ஒப்பந்தத்தின் போதும் ஓய்வூதியம் சீரமைக்கப்பட்டு (PENSION UPDATION) வழங்கப்பட்டு வருகிறது.

வங்கித்துறையில் கணிசமான அளவு ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வுதிய சீரமைப்பை எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கு மறுப்பது அரசியலமைப்பின் 14வது பிரிவுக்கு எதிரானது (UNEQUAL TREATMENT TO EQUALS) என்ற கருத்தை அரசும், வங்கி நிர்வாகங்களும் சீர்தூக்கி பார்க்க வேண்டும்.

பொதுத்துறை வங்கிகளின் பென்சன் கையிருப்பு ஏறத்தாழ 4,56,424 கோடி இருக்கும் போது ஓய்வூதிய சீரமைப்பை எட்டு லட்சம் வங்கி ஓய்வூதியர்களுக்கும் தாமதமின்றி வழங்க முன்வரவேண்டும்.

கடந்த 2024 ஆண்டு மார்ச் மாதம் வங்கித்துறையில் கையெழுத்தான இருதரப்பு ஊதிய ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட ExGralia கடந்த இரண்டு ஆண்டுகளாக பரிசீலனை செய்து உயர்த்தி வழங்காத வரலாற்று அநீதியை தாமதமின்றி களைய வேண்டும். கடந்த 1997க்கு முன்னர் ஓய்வு பெற்றோருக்கு அளிக்கப்பட்டு வரும் சொற்ப ஓய்வுதியமும், 2002-ஆம் ஆண்டுக்கு முன்னர், ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பஞ்சப்படியில் உள்ள பாதகமான முரண்பாடுகளையும் தாமதமின்றி களைய அரசும் வங்கி நிர்வாகங்களும் முன் வர வேண்டும்.

விண்ணை முட்டும் விலைவாசி, மலைக்க வைக்கும் மருந்துகளின் விலை, அச்சத்தை ஊட்டும் சிகிச்சை செலவுகள், நாளும் உயர்ந்து வரும் நோய்களின் எண்ணிக்கை ஆகியவற்றை தளர்ந்த உடலோடு தள்ளாத வயதில் எதிர்கொள்ள முடியாமல் நிலை குலைந்து நிற்கும் அறிவார்ந்த மூத்த தலைமுறையினருக்கு நிதி சார்ந்த நீதியை வழங்கி வங்கித்துறையில் மறுமலர்ச்சியையும், நாட்டு மக்களின் நல்லெண்ணத்தையும் பெற இந்திய அரசும், இந்திய வங்கிகள் நிர்வாகமும் முன்வரவேண்டுமென பாரத ஸ்டேட் பேங்கின் முன்னாள் தொழிற்சங்க தலைவர்களின் கட்டமைப்பு (AFCCOM) வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அந்தச் சங்கம் சார்பில் எஸ்.பி. இராமன் (தலைவர்), எம்.கே.மூர்த்தி (செயலாளர்) ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தி உள்ளனர்.



தாம்பரம் தொகுதிக்குட்பட்ட கடபேரி பகுதியில் உள்ள வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் சாலை அமைக்க வேண்டி புலிக்கொரடு பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா பெரும் முயற்சியால் தற்போது தாம்பரம் 32-வது வார்டில் உள்ள புலிக்கொரடு பகுதியில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ. ரூ.3 கோடியே 23 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை மற்றும் CUT AND COVER மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர் டி.காமராஜ், செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ்,மாமன்ற உறுப்பினர் எல்.பெரியநாயகம்,இ.கமலக்கண்ணன் மற்றும் அரசு வனத்துறை அதிகாரிகள் மாநகராட்சி அலுவலர்கள் வட்ட கழக நிர்வாகிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர. ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நாளைசென்னீர்குப்பம் EB ஆபிஸ் எதிரில் உள்ள கஸ்தூரி மஹால் (21-01-2026) புதன்கிழமை மாலை 5 மணிக்கு, திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ்,நிவேதா ஜெசிகா. மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார். பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

கூட்டம் முன்னதாக ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் வரவேற்புரை ஆற்றுகிறார் மேலும் இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: இன்று 20-01-2026 கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் திமுக மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்படும் பொருள் குறித்தும்,

ஜன.25 அன்று மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள் குறித்து

மார்ச் 1 கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை கொண்டாடுவது குறித்து கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர் - திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# திரு.வி.க. நகர் 74வது வட்டத்தில் 'அன்னம் தரும் அமுதக் கரங்கள்!'

## வட்டச் செயலாளர் எஸ்,புஷ்பராஜ் தலைமை! கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, ஜன. 20-

திரு.வி.க. நகர் 74வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.புஷ்பராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - இந்து சமய அறநிலைய துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில், அன்னம் தரும் அமுதக் கரங்கள் மாபெரும் திட்டத்தின் நிகழ்ச்சி 21.01.2026 புதன்கிழமை காலை 7.30 மணியளவில் 74வது வட்டம் ஏகாங்கிபுரம் மெயின் தெருவில் எனது (வட்டச் செயலாளர் எஸ்.புஷ்பராஜ்) தலைமையில் நடைபெற உள்ளதால் 74வது வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக, பகுதி கழக நிர்வாகிகள், பிற அணிகளை சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞரணி நிர்வாகிகள், BLA2, BDA, BYO நிர்வாகிகள், மற்றும் கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் எஸ்.புஷ்பராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## வாக்காளர் பட்டியல்: பெயர் சேர்த்தல், நீக்கல் சிறப்புத் தீவிரத் திருத்தங்கள்!

# சென்னையில் 24, 25 தேதிகளில் சிறப்பு முகாம்கள்!

## ஜன.30 வரை நீட்டிப்பு!

சென்னை, ஜன.20

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி, சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, வரைவு வாக்காளர் பட்டியல் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் பெறும் காலம் 19.12.2025 முதல் 18.01.2026 வரை என கால அவகாசம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்திய தேர்தல் ஆணையமானது தொடர்புடைய அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு, வாக்காளர் பதிவு விதிகள், 1960 இன் விதி 12இன் உபவிதியின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, தமிழ்நாடு மாநிலத்தில் நடைபெற்று வரும் சிறப்பு தீவிரத் திருத்தத்தின் பொருட்டு, ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் தாக்கல் செய்யும் காலம் 30.01.2026 வரை நீட்டிக்க முடிவு செய்துள்ளது.

அதன் அடிப்படையில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் தாக்கல் செய்யும் கால அவகாசம் 30.01.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலத்தில், தகுதியுள்ள குடிமக்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வசதியாக, வருகின்ற 24.01.2026 (சனிக்கிழமை) மற்றும் 25.01.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரண்டு நாட்களிலும் சென்னை மாவட்டத்தில் உள்ள 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் காலத்தில், வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத குடிமக்கள் மற்றும் 18 வயது நிரம்பிய தகுதியுடைய குடிமக்கள் படிவம்-6ஐ உறுதிமொழி படிவத்துடன் (Declaration Form) சமர்ப்பித்து தங்கள் பெயரை சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

மேலும், ஒரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள எந்தவொரு வாக்காளரும், முன்மொழியப்பட்ட சேர்க்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கவோ அல்லது ஏற்கனவே உள்ள பெயரை நீக்க கோரவோ படிவம்-7 மூலம் விண்ணப்பிக்கலாம்.

முகவரி மாற்றுதல் / ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளை திருத்தம் செய்ய / வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) மாற்றம் செய்ய / மாற்றுத்திறனாளி (PwDs) வாக்காளர்கள் என குறிப்பது ஆகிய கோரிக்கை உடையவர்கள் படிவம்-8 மூலம் விண்ணப்பிக்கலாம்.

வாக்காளர்கள் அனைவரும், இந்த நீட்டிக்கப்பட்ட கால அவகாசத்தைப் பயன்படுத்தி, வாக்காளர் பட்டியல் தொடர்பான ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகளை உரிய முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு மைலாப்பூரில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு திருக்குறள் புத்தகம் வழங்கப்பட்டது. மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. இலக்கிய அணி நிர்வாகிகளுடன் இணைந்து பொதுமக்களுக்கு திருக்குறள் புத்தகம் வழங்கினார். இதில் இலக்கிய அணி நிர்வாகிகள் மாவட்ட துணை அமைப்பாளர்கள் அயன் ரமேஷ், மாஸ் செந்தில் குமார், மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி, மயிலை மேற்குப்பகுதி அமைப்பாளர் க. கணபதி, தலைவர் பி.எஸ்.ஆறுமுகம், பகுதி துணை அமைப்பாளர்கள் கந்தசாமி இந்திரகுமார், ஆதி, அறிவுமணி, சம்பத் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.